பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 225

வியாழக்கிழமை
10 ஜூலை 2025

ஆனி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## இலங்கைக்கு 30 வீத வரி!

ட்ரம்ப் அறிவிப்பு

விரிவு பக்:- 12

# ஈஸ்டர் குண்டுவெடிப்புப் பற்றி பிள்ளையானுக்கு முன்பே தெரியும்

### அமைச்சர் ஆனந்த விஜயபால அதிர்ச்சித் தகவல்



கொழும்பு, ஜூலை 10

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார். 11

## ராஜபக்சக்கள் ஆட்சியமைக்கவே உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சதி

### போட்டுடைத்தார் அமைச்சர் பிமல்



கொழும்பு, ஜூலை 10

2015ஆம் ஆண்டில் தோல்வியடைந்த ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக, பதற்றமான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கான நடவடிக்கை 2016ஆம் ஆண்டு முதல் 11

## சாராவின் உயிரிழப்பில் வலுவான சந்தேகங்கள்

### அமைச்சர் விஜயபால அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

உயிர்த்தஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவரான, புலஸ்தினி மகேந்திரன் எனப்படும் சாரா ஜஸ்மின் உயிரிழந்தமை தொடர்பிலும், அவரின் இறப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்பட்ட டி.என்.ஏ. பரிசோதனையிலும் வலுவான சந்தேகம் 11

### ஈஸ்டர் தாக்குதல்தாரி தொடர்பில்

## துல்லிய தகவல் வழங்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை!

### நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 10

தற்கொலைக் குண்டுதாரி தொடர்பில் ஹோட்டல் நிர்வாகத்தால் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட் 11

### செம்மணிப் புதைகுழியில்

## நேற்று ஒரேநாளில் 7 என்புத் தொகுதிகள்



யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது ஏழு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. 11

## மனிதப் புதைகுழியிலிருந்து சிறுமியின் ஆடை மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 10

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது, சிறுமியின் ஆடை உட்பட சில ஆடைகளும், பாதணிகளும் சான்றுப் பொருள்களாக மீட்கப்பட் 11

## 205 திட்டங்கள் அரசாங்கத்தால் நடைமுறை

விரிவு பக்:- 02



## சென்.பீற்றர்ஸ் படுகொலைகள்; நினைவேந்தல் உணர்வுபூர்வம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம்மீது, இலங்கை விமானப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் 30ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று மாலை கடைப்பிடிக்கப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் பங்குத்தந்தை தலைமையில் திருப்பலியும், ஆராதனையும் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் 11

### யாழ்ப்பாணம்

## முலவையில் சடலம் மீட்பு!

யாழ்., ஜூலை 10

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் முலவைச் சந்திக்கு அருகில் நேற்றுப் புதன்கிழமை காலை குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகரப்பகுதியைச் சேர்ந்த அழகரத்தினம் கிறிஸ்டி பால்ராஜ் 11

## செம்மணிப்புதைகுழி தொடர்பில் இலங்கையுடன் பிரிட்டன் பேச்சு

கொழும்பு, ஜூலை 10

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் லமி தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் வெளிவிவகார நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம் 11



முச்சந்தி முரளி

'அப்ப இனிமேல் கன உண்மையள் ஒவ்வொண்டா வெளியில வருமெண்டு சொல்லுங்கோ'

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் தையிட்டியில் போர்!

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரையை உடனடியாக அகற்றுமாறு வலியுறுத்தி, நேற்று அந்தப் பகுதியில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் காணிகளை அடாத்தாக ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக, ஒவ்வொரு மாதமும் பூரணை 11

### பல்லாயிரம் பக்தர்களுக்கு மத்தியில்

## நயினை நாகபூஷணிக்கு நேற்றுத் தேர்த்திருவிழா!



யாழ்ப்பாணம், ஜூலை 10

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுப் புதன்கிழமை காலை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

நேற்றுக் காலை 7 மணியளவில் வசந்த மண்டபப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 09.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4127 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 15 43 59 78 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 09.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1194 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 09 18 60 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 09.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0153 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 5 3 0 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 09.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2233 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கங்கள் | 37 42 61 62 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 09.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5885 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 9 4 7 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 09.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1915 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 14 40 45 73 |
| விசேட எழுத்து | V |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 09.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0460 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 9 4 7 5 |

# 205 பெரும் திட்டங்கள் அரசால் நடைமுறை

**கொழும்பு, ஜூலை 10**

**அரசாங்கத்தால் தற்போது 205 பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன என்றும், அவற்றில் 21 புதிய திட்டங்கள் உள்ளடங்குகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை அண்மையில் அமைச்சரவையால் பரிசீலிக்கப்பட்டுள்ளது.**

திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையில்,

2025ஆம் ஆண்டில் 145 திட்டங்களை நிறைவுசெய்ய அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது. 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டு முடிவதற்குள் 74 திட்டங்கள் பூர்த்திசெய்யப்படவுள்ளன. 24 திட்டங்கள் 2026ஆம் ஆண்டிலும், 19 திட்டங்கள் 2027ஆம் ஆண்டிலும், 9 திட்டங்கள் 2028ஆம் ஆண்டிலும் நிறைவுசெய்யப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டு முடிவில், சம்பந்தப்பட்ட அமைச்சகங்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட பெரும் அபிவிருத்தித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்களை அமைச்சரவை ஆய்வு செய்தது. நிதியமைச்சர், திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட, இலக்குக் காலப்பகுதிக்குள் இந்த அபிவிருத்தித் திட்டங்களை நிறைவுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 09.07.2025 | புதன்கிழமை | 0593 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| J | 4 1 7 1 5 7 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.07.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2859 | Z | 24 26 39 70 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.07.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 27 37 70 79 | 5020 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.07.2025 | புதன்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 49 51 55 61 | 4571 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 09.07.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 31 | 19 22 43 54 | 2035 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.07.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 07 14 41 51 | 2685 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.07.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| G | 02 09 34 43 | 2142 |

## அமெ. வரிச் சிக்கலுக்கு தீர்வை முன்வையுங்கள்

*ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து*

கொழும்பு, ஜூலை 10

அமெரிக்காவால் விதிக்கப்பட்ட பரஸ்பரத் தீர்வைவரி தொடர்பாக அமெரிக்காவுடன் பேசுகிறோம், பேசுகிறோம் என்று அமைச்சர் குறிப்பிடுகிறார். ஆனால் இதுவரையில் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின்கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரச்சினை உள்ளதை நாங்களும் அறிவோம். தீர்வையே நாம் கேட்கின்றோம். அரசாங்கத்தின் தாமதம் தொழில் முறையினருக்கே பாதிப்பை ஏற்படுத்தும்.

இலத்திரனியல் வணிகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்ற சிக்கல்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்று அமைச்சர் குறிப்பிடுகிறார். அந்தத் தீர்வுகள் என்னவென்பதை அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும்.

ஏற்றுமதிச் சேவைகளுக்கும், சர்வதேச நிறுவனங்களின் தேசிய சேவைகளுக்கும் புதிதாக வரி அறவிடப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது. இதனால் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்ளவேண்டும். டிஜிற்றல் பொருளாதாரம் தொடர்பாகப் பேசப்படுகிறது. ஆனால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் டிஜிற்றல் சேவைகளுக்கும் வரி அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வரிக் கொள்கையை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்பட்டால் எவ்வாறு டிஜிற்றல் பொருளாதாரத்தை முன்னேற்றமுடியும்? - என்றார். (எ-இ)

## மலேசியாவுக்கு விஜித ஹேரத்



கொழும்பு, ஜூலை 10

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் இரு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று வியாழக்கிழமை மலேசியா செல்லவுள்ளார். மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் உள்ளிட்ட அந்நாட்டு அரசாங்கத்தின் பிரதான பிரமுகர்களை அவர் சந்திக்கவுள்ளார்.

மேலும் அமைச்சர் விஜித ஹேரத் இந்த விஜயத்தின் போது ஆசிய அமைச்சர்கள் மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார். இதன்போது அவுஸ்திரேலிய, ரஷ்ய மற்றும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடனான சந்திப்பிலும் அமைச்சர் விஜித ஹேரத் கலந்துகொள்ளவுள்ளார். இதன்போது இலங்கைக்கும் குறித்த நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது. (ச-இ)

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சுயாதீன விசாரணை அவசியம்

*எதிர்க்கட்சி வலியுறுத்து*

கொழும்பு, ஜூலை 10

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அசாத் மௌலானா என்ற நபரை பிரான்ஸில் இருந்து நாட்டுக்கு அழைத்துவந்து விசாரிக்கமுடியாதா? அல்லது இங்கிருந்து அதிகாரிகள் குழுவொன்றை விசாரணைக்கு அனுப்பமுடியாதா? இதற்குரிய நடவடிக்கை ஏன் இடம்பெறவில்லை? எதற்காக தாமதம்? யாரைப் பாதுகாக்க அரசாங்கம் முற்படுகின்றது? நீதிக்காக சுயாதீன சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார். (ச-44)

## பழிவாங்கல் அரசாங்கம்

*விமல் ஆதங்கம்*

கொழும்பு, ஜூலை 10

கொள்கலன்களை விடுவித்தவர்களிடம் விசாரணை நடத்தாமல் அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தவரிடம் விசாரணை நடத்துவது பழிவாங்கும் நோக்கத்திலாகும் என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகிய பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சோதனைக்குட்படுத்தாமல் சுங்கப்பிரிவினர் விடுவித்ததாகக் கூறப்படும் சர்ச்சைக்குரிய 223 கொள்கலன்கள் தொடர்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் தான் தெரிவித்த கருத்துத் தொடர்பில் விசாரிப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைத்தனர்.

இந்த அரசாங்கம் பழிவாங்குவதைத் தவிர வேறு எதைச் செய்கிறது. இந்த அரசு பொய் சொல்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிப் புதைகுழி வழக்கில் உயர்மட்டத்தால் அச்சுறுத்தல்

## சட்டத்தரணி சுகாஷ் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 10**

**செம்மணி மனிதப் புதைகுழியில் முறைப்பாட்டாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. உயர்மட்டங்களைச் சேர்ந்தவர்களாலேயே இந்த அச்சுறுத்தல் ஏற்படுகிறது என்று சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.**

செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி வழக்கின் இரண்டாம் கட்டத்தின் பதின்மூன்றாம் நாளில் பங்கேற்று அகழ்வாய்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே சட்டத்தரணி சுகாஷ் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சித்துப்பாத்தி மயானத்தில் தகனமேடை அமைக்கப்பட்ட போது சில எலும்புப்பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அந்தப் பணியாளர்களால் அந்த விடயம் அரச அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இதற்கு எதிராக கிருபாகரனால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டு நாங்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகியதால்தான் இந்த வழக்கு ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இடையிலே இந்த வழக்கைத் திசைதிருப்புவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் ஒரு கட்டமாக முறைப்பாட்டாளருக்குப் பல்வேறு அச்சுறுத்தல்களும் இடையூறுகளும் பல்வேறுபட்ட தரப்புகளால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

முறைப்பாடுகள் எந்த நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டுமோ அந்த நிலையங்களினுடைய உயர்மட்டங்களைச் சேர்ந்தவர்களாலேயே அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இதனாலேயே ஈழத்தில் அரங்கேறிய இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை ஒன்று மாத்திரமே தீர்வாக அமையும் என்று வலியுறுத்துகிறோம் - என்றார். (ச-26)



# சிறைச்சாலைகளில் நிறையும் கைதிகள்

கொழும்பு, ஜூலை 10

நாட்டின் சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 12 ஆயிரம் எனவும் தற்பொழுது மொத்தம் 33 ஆயிரம் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக கைதிகளின் எண்ணிக்கை வெகுவாக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# அறநெறி ஆசிரியர்களுக்கு வருடாந்தக் கொடுப்பனவு

கொழும்பு, ஜூலை 10

இலங்கையில் உள்ள அறநெறி ஆசிரியர்களுக்கு ஆண்டுக்கு 7,500 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சமூகத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கு அறநெறிப் பாடசாலைக் கல்வி பெரும் பங்களிப்பைச் செய்கின்றது.

அதன்படி, 2026 ஆம் ஆண்டு முதல், பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மதங்களைச் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளில் ஒரு வருட தொடர்ச்சியான சேவையைப் பூர்த்திசெய்த ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் கொடுப்பனவு மற்றும் சீருடைக் கொடுப்பனவு உள்ளடங்கலாக, ஆண்டுக்கு ஒரு முறை 7,500ரூபா வழங்கப்படவுள்ளது.

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கமகேதர திசாநாயக்க சமர்ப்பித்த இந்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (ச-இ)



# பாடசாலைகளுக்கு அடுத்தாண்டு இணையவசதி

கொழும்பு, ஜூலை 10

2026ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து இடைநிலைப் பாடசாலைகளுக்கும் இணையவசதிகள் வழங்கப்படும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

1000 பாடாசலைகளுக்கு ஸ்மார்ட் போர்ட்டுகள் மற்றும் பிற தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கமுன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# மதுவரி ஆணையாளராக முன்னாள் கடற்படை அதிகாரி

கொழும்பு, ஜூலை 10

மதுவரி ஆணையாளர் நாயகம் பதவியில் மாற்றம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

இதன்படி, குறித்த பதவிக்கு இலங்கைக் கடற்படையின் ஓய்வுபெற்ற கொமடோர் எம்.பீ.என்.ஏ. பேமரத்னவை நியமிக்க அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

தற்போது மதுவரி ஆணையாளர் நாயகமாகக் கடமையாற்றும் இலங்கை உள்நாட்டு வருவாய் சேவையின் சிறப்புதர அதிகாரியான யு.எல். உதய குமார பெரேரா இன்று ஓய்வு பெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)




# வாயைத் திறந்த பிள்ளைப்பூச்சி

**பொத்திப் பொத்தி வைச்சிருந்த பூதத்தின்ர விளையாட்டுகள் எல்லாம் கடைசியில வெளியில வந்திட்டுது. வேற யார், பிள்ளையான் தான் அந்தப் பூதம். ஈஸ்டர் தாக்குதலுக்கும் பிள்ளையானுக்கும் சம்பந்தம் இருக்கெண்டு அவரோட கூட இருந்த அசாத் மௌலானா தொடக்கம் கனபேர் காட்டுக்கத்தலாக் கத்தியும் அப்ப இருந்த நல்லாட்சிக்காரரும் அதைக் காது குடுத்துக் கேக்கேலை, பிறகு வந்த ராஜபக்ச குடும்பமும் அதைக் கண்டுகொள்ளேலை. ஏனெண்டால் அவைக்கும் உண்மை தெரியும். பிள்ளையானைக் கிளறவெளிக்கிட்டால் தங்கட வண்டவாளமும் வெளியில வந்திடும் எண்ட பயத்தில அவையள் பிள்ளையானைக் காப்பாத்தத்தான் பாத்தவையே தவிர, ஈஸ்டர் குண்டு வெடிப்பில செத்தவைக்கு நீதிகிடைக்கோணும் எண்டு நினைக்கேலை.**

**பிள்ளையான் ஒண்டும் லேசுப்பட்ட ஆள் கிடையாது. கருணாவுக்கும் பிள்ளையானுக்கும் முஸ்லிம்களைக் கண்டாலே ஆகாது. இயக்கத்தைவிட்டுப் பிரிஞ்சு கிழக்கில தனிய இயங்கத் தொடங்கின கருணாவும், பிள்ளையானும் முஸ்லிம்கள் கனபேரைப் பிடிக்கிறதும், அடிக்கிறதும், சுடுகிறதும் எண்டு செய்யாத அட்டகாசங்கள் இல்லை. உங்களுக்கு காட்டுமிருகங்களை வேட்டையாடின சிங்கத்தை முயல் ஏமாத்தி கிணத்துக்க விழவைச்ச கதை தெரிஞ்சிருக்கும். அந்தக் கதையில சிங்கத்தோட மிருகங்கள் எல்லாம் ஒரு டீல் போடுவினம். "நீங்கள் எங்களை வேட்டையாட வேண்டாம், நாங்களே ஒருநாளைக்கு ஒருத்தர் எண்டு உங்களுக்கு இரையா வாறம்" எண்டதுதான் அந்த டீல். அதைமாதிரி பிள்ளையானோடையும் முஸ்லிம்காரர் டீல் போட்டதாலதான் தப்பினவை. எல்லா இடத்தையும் கோடரிக்காம்புகள் இருக்கிற மாதிரி, பிள்ளையானோடயும் சில முஸ்லிம்கள் நிண்டவை. அவைதான் இந்த டீலை முடிச்சு வைச்சவையாம்.**

**அப்பிடி டீல் போட்ட பிறகும் பிள்ளையானுக்கு முஸ்லிம்களை அழிக்கிற வெறி அடங்கேலை.அப்பதான் புலனாய்வுக்குப் பொறுப்பா இருந்த சுரேஷ்சாலே எண்டவர், முஸ்லிம்களை முஸ்லிம்களை வைச்சே அழிக்கிற திட்டத்தை பிள்ளையானுக்குச் சொல்லியிருக்கிறார். இதுக்கு பெரிய இடத்தில இருந்து சப்போர்ட் கிடைக்கும், பதவி கிடைக்கும், ஜெயில்ல இருந்து விடுதலை கிடைக்கும் எண்டெல்லாம் பிள்ளையானுக்கு ஆசை காட்டியிருக்கிறார். கரும்பு தின்னக் கைக்கூலியும் தந்தால் பிள்ளையான் எப்பிடி வேண்டாமெண்டுவார்? அதால ஜெயிலுக்க இருந்தபடியே தன்ர படைபரிவாரங்களை இந்த வேட்டைக்காக சுரேஷ் சாலேயோட சேர்த்துவிட்டிருக்கிறார். இதைவிட இன்னும் கனக்க ரகசியங்கள் பிள்ளையானுக்குத் தெரியும்.முக்கியமா ஈஸ்டர் தாக்குதலின்ர உண்மையான சூத்திரதாரி பற்றிக்கூட அவருக்குத் தெரிஞ்சிருக்க நிறையவாய்ப்பிருக்கு. ஏனெண்டால் பிள்ளையானோட நிண்ட அசாத் மௌலானாவுக்கே இவ்வளவு தெரிஞ்சிருக்கெண்டால், பிள்ளையானுக்கு எவ்வளவு தெரிஞ்சிருக்கும்? இப்பதானே ஆள் வாயைத் திறந்திருக்கு. இனிமேல் ஒவ்வொரு மர்மமா துலங்கும் கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் உற்சாகம் ஏற்படும். அலுவலகத்தில் சக ஊழியர்களால் ஏற்பட்டிருந்த மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**இடபம்:** பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். அலுவலகத்தில் சக ஊழியர்களின் வேலைகளை எடுத்துச் செய்ய வேண்டிவரும்.

**மிதுனம்:** உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய் மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். பிற்பகலுக்குமேல் வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். இளைய சகோதரவகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் குறையும். முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். பிள்ளைகள்வழியில் தேவையற்ற சில பிரச்சினைகள் ஏற்பட்டு சங்கடம் தரக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் மனைவிக்கிடையே சிறு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவுசெய்யநேரிடும் என்பதால், கையிருப்புக் கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணை உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** உற்சாகமான நாள். சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்குத் திடீர்ப்பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்பட வேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத் துணையுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம்.

**கும்பம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும்கூட கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும் கணவன் மனைவிக்கிடையில் வீண்விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத் துணை உங்கள் தேவையைப் பூர்த்திசெய்வார்.

# சுண்டிக்குளம் நில அளவைக்கு உடன் அனுமதி வழங்கக்கூடாது

## பரு.பிரதேசசபை உறுப்பினர் பிரதேச செயலருக்குக் கடிதம்

**யாழ்ப்பாணம், ஜுலை 10**

**சுண்டிக்குளத்தில் கடற்படையினர் காணி அளவீடு செய்வதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று பருத்தித்துறைப் பிரதேசசபை உறுப்பினர் கணைச்செல்வன், வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.**

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் ஜே/435 கிராமசேவகர் பிரிவே சுண்டிக்குளக் கிராமமாகும். இங்கு கடற்படையால் சில தினங்களாக நில அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விடயம் தங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதா என்று கடந்த 7ஆம் திகதி தொலைபேசி ஊடாகத் தங்களிடம் கேட்டபோது, அது வனஜீவராசிகள் திணைக்களத்தின் எல்லைக்குள் இருக்கின்றது, எம்மிடம் அனுமதிபெறத் தேவையில்லை என்று கூறியிருந்தீர்கள்.

நில அளவையாக இருந்தாலும் சரி, நீர் அளவையாக இருந்தாலும் சரி பிரதேச செயலகத்துக்கு அல்லது பிரதேசசபைக்குத் தெரியப்படுத்தியே மேற்கொள்ள வேண்டும் என்று கடற்படை அதிகாரிகளிடம் நாம் சுட்டிக்காட்டியிருந்தோம். அதை ஏற்றுக்கொண்ட அவர்கள் பிரதேச செயலகத்துக்குத் தெரியப்படுத்தி இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அதுவரை அளவீட்டு நடவடிக்கைகளை நிறுத்திவைக்கின்றோம் என்றும் தெரிவித்தனர். தாங்கள் இதற்கான அனுமதியை உடனடியாக வழங்காது, பருத்தித்துறைப் பிரதேசசபைத் தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் கிராமமட்ட பொது அமைப்புகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோருகின்றேன் என்றுள்ளது. (எ-27,66)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுப் புதன்கிழமை சிறப்புற நடைபெற்றது.

# அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

வேலணை, ஜுலை 10

தீவகக் கல்வி வலயத்துக்குட்பட்ட வகை 2 மற்றும் வகை 3 ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு மூன்று வருடங்களுக்கு சேவையாற்றக்கூடிய இலங்கை அதிபர் சேவை தரம் 2, தரம் 3 ஆகியவற்றைச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வகை 2 ஐச் சேர்ந்த எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், வேலணை சரஸ்வதி வித்தியாலயம் மற்றும் வகை 3 ஐச் சேர்ந்த வேரப்பிட்டி ஶ்ரீகணேசா வித்தியாலயம், சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி த.க.பாடசாலை ஆகியவற்றில் வெற்றிடமாகக் காணப்படும் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவத்தினை வலய நிர்வாகப் பகுதியில் பெற்றுப் பூர்த்திசெய்து ஜுலை 17ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வேலணை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-25, 9)

# நிறைவு விழா

கொடிகாமம், ஜுலை 10

சாவகச்சேரி சந்திரபுரம் செல்வ விநாயகர் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழா தலைவர் திருமதி வ.சுமதி தலைமையில் சந்திரபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மா.சி.க.கூ.சங்கத் தலைவர் திருமதி ப.சறோஜினி, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.நிமலறூபன், யா.மா.சி.க.கூ.சங்கச் செயலாளர் திருமதி பு.தயாநிதி, சாவகச்சேரி பிராந்திய வெளிக்கள அலுவலர் திருமதி த.உஷா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-159)





# கவனவீர்ப்பு நடைபயணம்

கொடிகாமம், ஜுலை 10

சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கமான வல்லமை அமைப்பின் பௌர்ணமி நாள் நிகழ்வான அனைத்து வன்முறைகளுக்கும் நீதி கோரும் கவனவீர்ப்பு நடைபயணம் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்வியங்காட்டுச் சந்தியில் ஆரம்பித்து ஏ-9 வீதி, யாழ். வரவேற்பு வளைவு வரையாக கவனவீர்ப்பு நடைபயணம் இடம்பெறவுள்ளது. (ச-41-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# கர்தினாலும் காலதாமதமும்!

'இலங்கையில் 75 ஆண்டுகளாக அதிகாரத்தில் இருந்த சர்வாதிகார ஆட்சியாளர்களை ஓரங்கட்டவும், தோற்கடிக்கவும் ஜனாதிபதி அநுரகுமாரவால் முடிந்துள்ளது. இந்த நாட்டில் பல சந்தர்ப்பங்களில் மனித உரிமைகள் மீறப்பட்டன, சர்வாதிகார அரசியலமைப்பால் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டன' என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் கத்தோலிக்கத் திருச்சபையின் இலங்கைக்கான தலைவரும் பேராயரும் கர்தினாலுமான மல்கம் ரஞ்சித் ஆண்டகை. இலங்கைக்குப் புதிய ஆரம்பம் தேவைப்படுகின்றது, அனைத்துப் படுகொலைகளும் விசாரிக்கப்படவேண்டும், ஈஸ்டர் தாக்குதல்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்றும் கர்தினால் கோரிக்கை விடுத்துள்ளார்.


முன்னொரு காலத்தில் ராஜபக்சக்களின் வெற்றிக்கு மறைமுகமாக பக்கபலமாக இருந்தவர்தான் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. ஈஸ்டர் தாக்குதல்கள் காலத்தில் 'நாட்டின் மீட்பராக' கோத்தாபய ராஜபக்ச அடையாளப்படுத்தப்பட்டு, இலட்சக்கணக்கான சிங்கள மக்கள் தமது வாக்குகளை அவருக்கு வாரி வழங்கியபோது, அந்த உணர்ச்சிப் பிளம்புக்குள் ஒருவராக அள்ளுண்டு போனவரும் இதே கர்தினால்தான். ஆனால், காலம் அவருக்குப் பல விடயங்களைக் கற்பித்தது. இன்று கர்தினாலிடம் ஏற்பட்டுள்ள மாற்றம் மிகக் கனதியானது வரவேற்கப்படவேண்டியது. எனினும் தற்போதும்கூட அவர் சில விடயங்களில் முழுமையான கருத்துகளை வெளிப்படுத்தியதாகவோ அல்லது அனைத்து மக்களுக்குமான தலைவராகத் தன்னை நிலைநிறுத்துவதாகவோ இல்லை. இறுதிப்போரின் போதும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பில் அன்றுபோல் இன்றும் கர்தினால் வாய் திறக்காமை அபத்தமானது. அண்மையில் காலமான, கத்தோலிக்கத் திருச்சபையின் முன்னாள் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ், இஸ்ரேலின் தாக்குதல்களால் பலஸ்தீனத்தில் கொல்லப்படும் அப்பாவி முஸ்லிம்களுக்காக ஒவ்வொருநாளும் குரல்கொடுத்தார். யூத நாடான இஸ்ரேல் தாக்குதலை நடத்தியபோதிலும் - அந்த நாட்டுக்கு மேற்குலகின் பலமான ஆதரவு இருந்த வேளையிலும் - அப்போது பாப்பரசராக இருந்த பிரான்சிஸின் இதயம் தேடியது நீதியை மட்டும்தான். முஸ்லிம்களுக்கான தன் மூச்சின் இறுதிக் கணம்வரை குரல் கொடுத்தமைக்கு அதைவிட வேறேதும் காரணம் இருக்கமுடியாது.

அத்தகையதொரு செயற்பாட்டைத்தான் ஈழத் தமிழர்களும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் எதிர்பார்க்கின்றனர். வடக்கு, கிழக்கில் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். விரல்விட்டு எண்ணமுடியாத அளவுக்குத் தேவாலயங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றன. ஈழத் தமிழ் கத்தோலிக்கர்களும் பல்லாயிரக்கணக்கில் இறந்துள்ளனர். எனவே, ஒரு மதத்தலைவராகவும், சமூகத் தலைவராகவும், தூய ஆன்மீகவாதியாகவும் ஈழத் தமிழர்களுக்குக் குரல்கொடுக்கவேண்டியது கர்தினாலின் காலக்கடமை. காலம் எனும் நதி கரைபுரண்டு ஓடிய பின்னர், இன்று சில உண்மைகளைக் கர்தினால் உணர்ந்திருக்கின்றார். அதுபோல் இன்னும் சில ஆண்டுகளில், இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் தொடர்பான தெளிந்த புரிதல் அவருக்கு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. ஆனால், அனைத்துத் தாமதங்களும் ஏற்புடையன அல்ல.

நாளொரு நல்வார்த்தை

அறிவை நோக்கித் தொடர்ந்து செல்லும் பாதையே, வெற்றிக்கான வழி.

– நெப்போலியன் ஹில் –



# பகிடிவதையைத் தடுப்பதற்கு கடுமையாகச் செயற்படுங்கள்!

## உயர்நீதிமன்றம் உத்தரவு




**கொழும்பு, ஜூலை 10**

**இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பகிடிவதையைத் தடுப்பதற்கான தற்போதுள்ள வழிகாட்டுதல்களை கடுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.**

2020ஆம் ஆண்டில் பகிடிவதை காரணமாக உடல் மற்றும் மன ரீதியாகப் பாதிக்கப்பட்ட முதலாம் ஆண்டு மாணவர் பசிந்து ஹிருஷன் டி சில்வா தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
நீதிபதிகள் ஷிரான் குணரத்ன, பிரியந்த பெர்னாண்டோ மற்றும் சோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய மூவர் கொண்ட நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்தன.
இந்த வழிகாட்டுதல்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துதவற்குத் தேவையான நிதி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் வசதிகளை வழங்குமாறு கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சருக்கும் நீதிபதிகள் பணிப்புரை விடுத்தனர். (எ-இ)

## பொரளையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜூலை 10
பொரளை லெஸ்லி ரனகல மாவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.
துப்பாக்கிச்சூட்டுக்குப் பின்னர் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் துப்பாக்கிச்சூட்டில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (ச-இ)

# எம்.பி.யானார் நிஷாந்த ஜயவீர

கொழும்பு, ஜூலை 10
தேசிய மக்கள் சக்தியின் யூ.டி. நிஷாந்த ஜயவீர நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ளார். இவர் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார்.
கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவின் பதவி விலகலைத் தொடர்ந்து வெற்றிடமான தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு யு.டி. நிஷாந்த ஜயவீரவின் பெயர் சமீபத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# சிறுவர் மீது வன்முறையா? 109 ஐ அழையுங்கள்

கொழும்பு. ஜூலை 10
சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்கு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் 109 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்து.
சிறுவர்களை யாசகம் மற்றும் கடினமான தொழில்களில் ஈடுபடுத்துதல், துன்புறுத்துதல், துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்குமாறும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## வாகனங்களின் தரம் பரிசோதனை

கொழும்பு. ஜூலை 10
வாகனங்களின் தரம் குறித்து பரிசோதனை செய்யும் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளதாக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. வாகனங்களில்காணப்படும் பல்வேறு குறைபாடுகளினால் அடிக்கடி வாகன விபத்துகள் இடம்பெறுவதையடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Invitation for Bids (IFB)
## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA
## PROVINCIAL SPECIFIC DEVELOPMENT GRANT (PSDG) AND COUNCIL FUND WORKS

1. The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vengalacheddikulam Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. N o | Bid No. | Source of Fund | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required (Highway & Building Construction) | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | PSDG/NP/VAV/ VCKPS/2025/LA R/03 | PSDG | Construction of Menicfarm 5th Circular Road (NVVPE 092 -) | 4.06 | C8 & above(Highw ay | 41,000.00 | 09.10.2025 | 84 |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. Interested eligible bidders may obtain further information from Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road [Email: cheddips@gmail.com] from 09.00 Hrs to 15.00 Hrs and inspect the bidding documents at the address Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road, Cheddikulam .
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the "Schedule/Contract Data" of the Procurement Document.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road Cheddikulam. from 11.07.2025 until 23.07.2025 from 09.00 Hrs to 15.00 Hrs. Upon payment of a non-refundable fee of Two thousand five hundred Rupees ( 2500.00). The method of payment will be by cash.
6. Bids must be delivered to the address Chairman, Divisional Procurement Committee, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar-Madawachchi Road, Cheddikulam on or before 24th July 2025 and 14.30 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on 16.07.2025 at 10.30 Hrs at the Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar- Madawachchi Road, Cheddikulam.

The address (es) referred to above is (are):

Chairman,
Divisional Procurement Committee.
Vengala cheddikulam Pradeshiya Sabha,
Mannar- Madawachchi Road, Cheddikulam
[Telephone No: 024 2260914 Fax No: 024 2260913]

10.07.2025

(CR/45474) J-1

## விற்பனைக்கு

**சொந்த பாவனையில் உள்ள**

**SUZUKI (Auto Gear), ALTO K.10, VXI**

**கார் விற்பனைக்கு உண்டு.**

**தொடர்பு: மாலை 3 மணிக்குபின்**

**NO BROKERS**

**Tel:- 076 865 2067**

(CS/58811) J-1

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 . 04 . 1947



இறப்பு 03 . 07 . 2012

**திருமதி பரஞ்சோதி வள்ளிப்பிள்ளை**

திதி: பூரணை (10.07.2025)

ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

இக்கிரானை
கந்தரோடை, சுன்னாகம். (CS/58809) J-1

குடும்பத்தினர்

உ







பூஜ்யாய ராக வேந்திராய
சத்ய தர்மரதாயச
பஜதாம் கல்பவ்ரு சஷாய
நம தாம் காம தேனவே

## ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ம்ருத்திகா பிருந்தாவனம்
### (நல்லூர், யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா)

### குரு பௌர்ணமி தினம்

ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் குரு பௌர்ணமி தினம் இன்று 10.07.2025 மாலை 3.30 மணியளவில் ஸ்ரீ லலிதா சகஷ்ர நாம பாராணயத்துடன் ஆரம்பித்து 4.30 மணியளவில் குருபாத பூஜை ஆரம்பமாகும். ஸ்ரீ ராகவேந்திரசுவாமிகள் அடியார்கள் மற்றும் அடியார்கள் குரு பூர்ணிமா பூஜையில் கலந்து கொண்டு ஸ்ரீ ராகவேந்திரசுவாமிகளின் நல்லூர் பிருந்தாவனத்திற்கு வருகை தந்து சுவாமிகளின் ஆசிகளை பெறுமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**363, கோவில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா.**
**குருசேவையில் இருக்கும் அடியார்கள்**
**திருமதி. சிவசிதம்பரம் சசிதேவி**
**பிள்ளைகள்: மகன் - சி.நதிஷ்**

**உபயம்**
**திரு & திருமதி ஸ்ரீகாந்தா**
**ஸ்ரீ நந்தினி குடும்பம்**
**ஜேர்மனி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## HIRING NOW
## JUNIOR CIVIL/ STRUCTURAL DESIGN ENGINEER

**Join a Canada engineering firm - a great oppoertunity for fresh graduates to build a career in civil/ structural design!**

**Requirements**

- Bachelor's degree in Civil, Structural or releated Engineering field
- 0 - 2 years of experience (including internships)
- Knowledge of AutoCAD, Civil 3D or Revit is a plus

**Salary:**

Rs. 60,000 – 100,000/month (based on experience)

**Email your resume to:**

engineering@k2ae.ca, admin@k2ae.ca

யாழ்.மாவட்டத்தில்

# வெள்ளை ஈ கட்டுப்பாடு செயற்றிட்ட விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கத் தைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன்படி இரு வாரங்களுக்கு மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்றிட்டத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதிவரை சாவகச்சேரியிலும், 17 மற்றும் 18ஆம் திகதிகளில் கோப்பாயிலும், 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் உடுவிலிலும், 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நல்லூரிலும் மற்றும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் 200 தெளிகருவிகள் மூலம் தென்னை மரங்களை கழுவும் செயற்பாடுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெள்ளை ஈயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களையுடையோர் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெயரைப் பதிவு செய்யுமாறு தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் தேவராஜா வைகுந்தன் தெரிவித்தார்.

தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று நடைபெற்றபோதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார். (ச-27,20,66,9)

# INVITATION FOR BID 2025/II
# JAFFNA MUNICIPAL COUNCIL

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Municipal Mayor, Jaffna Municipal Council, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Provincial special grant from The Government of the Democratic Socialist Republic of Srilanka.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure from the registered contractors.
3. To be eligible for contract award, the successful bidder should not have been black listed and should have been registered in the relevant field at the Construction Industry Development Authority (CIDA), in the field of Building for grade mentioned in the table below valid until the date of closing of the bids. Further, the registration should be valid at the date of award.
" Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987." The original certificate of registration ( PCA 03) shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate.
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data and Contract Data (Section 5) for SBD 1 Documents (Works specified in GROUP B in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days From 2025-07-11 To 2025-07-24 during 09:00 hrs and 14:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Municipal Commissioner, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna (T.P:021-2217691/021 222 2019, Fax:021 222 2334) from 9:00 hrs to 14:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.
10. Bids shall be accompanied by a copy of valid CIDA Registration.
11. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids and it will be the final regarding the bids.

| | | |
|---|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2025-07-11 To 2025-07-24 |
| Pre-Bid Conference | At 11.00 AM on 2025-07-16 |
| Closing and Opening of Bids | At 10.30 AM on 2025-07-25 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| Group B | | | | | | | | |
| JMC/PMD/OTH/05/2025/B/01 | RENOVATION OF JAFFNA PUBLIC LIBRARY BUILDING | 24.898 | 84 Days | C6 or Above (Building ) | 8,500.00 +Vat 18% | 373,000.00 | 2025-11-07 | 77 Days |

Chairman
Regional Procurement Committee,
Jaffna Municipal Council,
Point pedro Road, Nallur, Jaffna.

(CR/J/373) J-1

# இனந்தெரியாத கும்பல் வீட்டின் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 10

கொக்குவில் கிழக்கில் உள்ள வீடொன்றின்மீது இனந்தெரியாத கும்பல் ஒன்று தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் சுமார் 15 பேர் கொண்ட கும்பல் ஒன்று கற்கள் மற்றும் கூரிய கம்பிகளால் வீடு மற்றும் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த கார்மீது தாக்குதல் நடத்திச் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கோப்பாய் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-27)

## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | - Rs. 3000.00 - Rs 3500.00 |
| மேசன் உதவியாளர் | - Rs 2500.00 |
| வெல்டர் | - Rs 3000.00 - Rs 3500.00 |
| வயறிங், பிளம்பிங் | - Rs. 3000.00 |
| அலுமினியம் பிற்றிங் | - Rs. 3000.00 |
| தச்சு வேலை | - Rs 3000.00 - Rs 3500.00 |
| பெயின்டர் | - Rs 3000.00 - Rs 3500.00 |

(தேவைப்படின் தினசரி சம்பளம் வழங்கப்படும்)
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)
தொடர்பு : 0777245399 (காலை 8.00 மாலை 5.30 வரை.)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(CS/56812) J-1

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வர்த்தக நிறுவனத்திற்கு

- றைவர்
- விற்பனை உதவியாளர்

போன்ற வேலையாட்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி வைக்கவும்.

**சுப்பசூஸ்**
**154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

## வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் ஒரு வியாபார நிலையத்திற்கு கணனி தரவு பதிவதற்கு (Data Entry, Computer bill) 23 வயதிற்கு உட்பட்ட ஆண் பணியாளர்கள் மட்டும் தேவை

- கல்வி தகைமை : O/L - தமிழ், கணிதம், ஆங்கிலம் (ஓரளவு), கணனி அறிவு (ஓரளவு) அவசியம்.
- திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை வழங்கப்படும்.


தொடர்புக்கு: 077 663 6384

(CS 3572) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
17.12.1976



மறைவு
08.07.2025

## நல்லதம்பி சுரேந்திரன்

குமரபுரம் பரந்தனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நல்லதம்பி சுரேந்திரன் அவர்கள் கடந்த (08.07.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்வராசா - ருக்குமணி தம்பதியரின் அன்பு மருமகனும், மாதினியின் (சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கண்டாவளை) அவர்களின் பாசமிகு கணவரும், அட்சயா (யா/ இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), அனுருத் ( கிளி/ பரந்தன் இந்து ம.வி, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அற்புதமலர், தெய்வேந்திரன், தெய்வீகமலர், ரவீந்திரன், கருணகலா, சுபிகலா ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் சாந்தினி, சபாரட்ணம், கலாமதி, சிவரூபன், ஜோ, செந்தில்குமரன், தாரணி ஆகியோரின் மைத்துனரும், உமாபாலன், ஹனூஷா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (10.07.2025) வியாழக்கிழமை மாலை 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பரந்தன் கோரக்கட்டு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 45, குமரபுரம்,
பரந்தன்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 854 3009

# மரண அறிவித்தல்

தோற்றம்
20.07.1930



மறைவு
08.07.2025

## கனகசபை குணரத்தினம்

மஞ்சத்தடி இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை - குணரத்தினம் அவர்கள் 08.07.2025 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலம் சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவராசா (சுவிஸ்) மற்றும் ராஜமனோகரி (சுவிஸ்), கலாமதி (சுவிஸ்), காந்திமதி (சுவிஸ்), மனோகரன் (சுவிஸ்), கணேஸ்வரன் (சுவிஸ்), விக்கினேஸ்வரி (சுவிஸ்), சிவாஜினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஆவார்.

நித்தியானந்தம் (சுவிஸ்), தர்மசீலன் (சுவிஸ்), யோகசேனன் (சுவிஸ்), கோபாலசிங்கம் (சுவிஸ்), விஜயகுமார் (சுவிஸ்), வரதலட்சுமி (சுவிஸ்), மேகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சினி, நிரோசன், கோபிகா, தர்ஷிகா, சர்வகாந்தசேனை, மதுசன், மதுமிலன், விதுசிகா, தக்ஷா, கார்த்திகா, ரவகாந்தசேனை, பவகாந்தசேனன், சாரங்கா, கௌஷிகா, விவேக்கா, யசிக்கா, கயானன், திவ்யன் ஆகியோரின் அன்புப் பேரனும், தனிக்கா, தருண், அனீனா, ருத்ரா, டர்னிக்கா, தனோச், துஷி, தனுசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரனின் இறுதிக் கிரியைகள் நாளை (11.07.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, ஈமக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 089 0684
0094 7929 57385

தகவல்:
குடும்பத்தினர்

(CS 58810) E

# மரண அறிவித்தல்

தோற்றம்
21.01.1948



மறைவு
08.07.2025

## திருமதி பாலசுந்தரம் பூபாக்கியலக்ஷ்மி

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தை சேர்ந்த திருமதி பாலசுந்தரம் பூபாக்கியலக்ஷ்மி கடந்த (08.07.2025) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு-அன்னமுத்து தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற தியாகராஜா-மங்கையகரசி தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வரதராஜா, தியாகராஜா, செல்வராஜா, ஆனந்தராஜா, ராசநாயகம் சிவபாக்கியலட்சுமி, தனபாக்கியலட்சுமி மற்றும் ராஜறஞ்சனி, ஜெயரஞ்சனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தியாகசீலன் (டென்மார்க்), பாலசொரூபி (லண்டன்) பாலமுறளி (நோர்வே) பாலசுதர்சனி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயசந்திரிக்கா, வரதபாலன், தர்மசாந்தினி, சதீஸ்வர்ராஜா ஆகியோரின் மாமியாரும், ஸ்ரிபன், டிலக்ஷன், சிமோன், நிதுர்சன், திலீபன், திவ்யன், சஞ்சய், கரிஷன், நிவேதிகா, சாருகா, ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அயீலின், நேகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார் .

அன்னாரின் ஈமக்கிரியைகள் வெள்ளிக்கிழமை 11.00-01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்

தகவல்:
குடும்பத்தினர்.

## வடமராட்சி மாமுனையில் 15 கிலோ கஞ்சா மீட்பு!

யாழ்., ஜூலை 10

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மாமுனைப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை பெருந்தொகையான கேரளக்கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு விசேட அதிரடிப் படையினரால் விசேடசுற்றிவளைப்பு செம்பியன்பற்று தெற்குப் பகுதி முழுவதும் மேற்கொள்ளப்பட்டது.

சுற்றிவளைப்பில் 8 பொதிகள் அடங்கிய 15.795கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் மீட்கப்பட்ட கேரளக் கஞ்சா மருதங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

(ச-113)

# மரண அறிவித்தல்

தோற்றம்
06.04.1953



மறைவு
08.07.2025

## நடராசா ஜெயராசலிங்கம்

சாவகச்சேரி கல்வயலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.நடராசா ஜெயராசலிங்கம் அவர்கள் கடந்த (08.07.2025) செவ்வாய்க்கிழமை விண்ணுலகெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - செல்லம்மா தம்பதியரின் நான்காவது புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, சாந்தநாயகி ஆகியோரின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற ஜெயசுந்தரி மற்றும் ஜெயசோதி, ஜெயபாலசுந்தரம், ஜெயராணி, ஜெயக்குமாரி, முருகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நந்தகோபன், ஜெயப்பிரதா, ஜெனனி, சதீசன், ரமணன், செந்தாளன், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரன், சிவானந்தன், சிவதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று (10.07.2025) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி, முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

கல்வயல்,
சாவகச்சேரி.

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS/58816) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானத்தின் மரங்கள் இரவோடிரவாகச் சாய்ப்பு

## மக்கள் விசனம்



கிளிநொச்சி, ஜுலை 10
கரைச்சிப் பிரதேசசபைக்கு உட்பட்ட கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் உள்ள பொது மயானத்தில் பெறுமதி மிக்க நாவல் மரங்கள் இரவோடிரவாக வெட்டிச் சாய்க்கப்பட்டு கடத்திச் செல்லப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
அத்துடன் கிராமங்களிலும் மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் வீடுகளிலும் இரவு வேளைகளில் மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன.
இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)

# ஆங்கிலக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜுலை 10
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகியகால ஆங்கிலக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 16 வயதிற்கு மேற்பட்டவராகவும், க.பொ.த. சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன்னதாக யாழ்ப்பாண பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-41)

# விளையாட்டு விழா

*சாவகச்சேரி, ஜூலை 10*
தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேச மட்ட விளையாட்டு விழா மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் பா. முகுந்தன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி க. விஜிதரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ச-25,9)

# துஷாரவுக்கு பிணை

கொழும்பு, ஜுலை 10
ஜனாதிபதி பொதுமன்னிப்பின்கீழ் கைதி ஒருவரை சட்டவிரோதமாக விடுவித்ததாகக் கூறப்படும் வழக்கில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, இடைநிறுத்தப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உப்புல்தெனியவுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.
சந்தேகநபர் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா 2 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள் ளார்.
இலங்கையில் உள்ள எந்தச் சிறைச் சாலைக்குள்ளும் அவர் நுழைவதற்கும் நீதிவான் தடை விதித்துள்ளார். (ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 02.05.1952 — மறைவு 07.07.2025



## கனகரத்தினம் தனபாக்கியவதி (மாம்பழம்)

யாழ் திருநெல்வேலி கிழக்கு, வெள்ளைப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் , இல 358, பருத்தித்துறை வீதி, நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலடியினை வசிப்பிடமாகவும் கொண்ட மாம்பழம் என்று அன்பாக அழைக்கப்படும் கனகரத்தினம் தனபாக்கியவதி அவர்கள் கடந்த (07.07.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்
அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், கனகரத்தினம் (அத்தாய், பூநகரி) அவர்களின் அன்பு மனைவியும், காண்டீபன் (மிருக வைத்தியர், கொழும்பு), செந்தூரன் (மருந்துக்கலவையாளர், பிரதேச வைத்தியசாலை, குருநகர்), மயூரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை), பகீரதன் (உத்தரவு பெற்ற நில அளவையாளர் மற்றும் நீதிமன்ற ஆணையாளர்), பிரதீபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஷ்மியா, ஜெஜிதா, நிருபா, சுதர்சனா, ஷாலினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஐசல், ஹர்ஷிகா, கனிஸ்ரிகா, அனுஷ்கா, பிரவிந், திருத்தணிகன், திருவரங்கன், திருஷிகா, அக்ஷயா மற்றும் அப்ஷரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சரஸ்வதி மற்றும் அன்னலட்சுமி, தனபாலசிங்கம், லீலாவதி, ரவீந்திரன், மாலதி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கமலபூசணி, செல்வரட்ணம், பாலசுந்தரம், பரமேஸ்வரன், இரத்தினம், வைத்திலிங்கம் மற்றும் செல்வரட்ணம், வாசுகி, தயாளினி, மகாலட்சுமி, திலகவதி, மனோரஞ்சிதம், தனலட்சுமி, ஈஸ்வரநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்
அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (10.07.2025) வியாழக்கிழமை, இல.358 பருத்தித்துறை வீதி, நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 03.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 27.08.1947 — மறைவு 07.07.2025



## தர்மலிங்கம் தவமணி

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தவமணி அவர்கள் கடந்த (07.07.2025) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிவகாமிப்பிள்ளை தம்பதியின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சற்குணநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலச்சந்திரன் தவமணி ஆகியோரின் மைத்துனியும், தர்மசீலன் (ஜேர்மனி), தவக்குமார் (இலங்கை), தயாநிதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற தவகலா மற்றும் தர்மினி (பிரான்ஸ்), உதயகுமார் (கனடா), பேரின்பநாதன் (பிரான்ஸ்), சிவகௌரி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீதா, ஜீவநந்தினி, குணசேகரன், சசிகுமார், குமுதினி, குஜிந்தா, காலஞ்சென்ற சுதாஸ்கரன், ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்மிகா, தர்சிகா, சர்னிகா, தனுஜன், ஜீவிதன், தரணிகா, குமுதினி, குவேந்தினி, தயந்தன், வினுஜன், கிவிஷன், அபிஷன், வைஸ்ணா, ஹர்சனா, அக்ஷனா, தர்மிகன், ஆர்னிகன், அஸ்விகா, யதுஷன், கிஷோத், மிதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2025) வியாழக்கிழமை முற்பகல் 07.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 451 2643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழகத்தில்


# இலங்கைத் தமிழர்களுக்கு ரூ.39 கோடியில் 729 வீடுகள்



சென்னை, ஜூலை 10

**தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 38.76 கோடி ரூபாவில் கட்டப்பட்ட 729 வீடுகளைத் தமிழக முதல்வர் ஸ்டாலின் கடந்த திங்கட்கிழமை திறந்துவைத்தார்.**

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பான மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை உறுதிசெய்யப்படும். இலங்கை அகதிகள் முகாம் என்பது இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. 26 மாவட்டங்களில் உள்ள 67 முகாம்களில் பழுதடைந்த 7 ஆயிரத்து 469 வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் கட்ட ஆணை வழங்கப்பட்டு புதிய வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் ஏற்கனவே 18 மாவட்டங்களில் உள்ள 32 முகாம்களில் கட்டிமுடிக்கப்பட்ட 2 ஆயிரத்து781 புதிய வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக 38.76 கோடி ரூபாவில் கட்டப்பட்டுள்ள 729 வீடுகளைச் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வாயிலாக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்- என்றுள்ளது. (ச-இ)



## மணலுடன் தப்பிய டிப்பர் சூடு நடத்திப் பிடிப்பு!

கிளிநொச்சி, ஜூலை 10

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் அறிவுறுத்தலை மீறித் தப்பிச்சென்ற நிலையில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்திப் பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்துள்ளது.

மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தைப் புளியம்பொக்கணைச் சந்திப்பகுதியில் வைத்துப் பொலிஸார் மறித்து சோதனை செய்ய முற்பட்டபோது பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச் சென்ற நிலையிலேயே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இதன்போது டிப்பர் சாரதி தப்பியோடிய நிலையில் மணலுடன் டிப்பர் வாகனத்தை மீட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-113.9)

## போர்க்காலத்தில் புலிகளே தமிழரைக் கொன்றனராம்

*சாகர காரியவசம் கூறுகின்றார்*

கொழும்பு, ஜூலை 10

போர்க்காலத்தில் புலிகளே பெருமளவிலான தமிழ் மக்களைக் கொலைசெய்தனர். இராணுவத்தினர் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்று மொட்டுக் கட்சிச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர்க் காலத்தில் நீலம் திருச்செல்வம், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் போன்றவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதிகளவான தமிழர்களைப் புலிகளே கொலைசெய்தனர். எமது இராணுவம் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

கொழும்பில் கொலைசெய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களுள் பெரும்பாலானவர்களைப் புலிகளே கொன்றனர். துரையப்பாவைக் கொன்றதும் புலிகள்தான். யாழில் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கையை அனுமதிக்காத சமாதானத்தைக் கோரிய மக்களைக் கொன்றதும் அவர்கள்தான். அரசியல் இலாபத்துக்காக அதைப் (செம்மணியை) பயன்படுத்தக்கூடும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாடாளுமன்றம் வந்தார். இராணுவத்துக்கு எதிராகக் கூட்டமைப்பினர் மற்றும் அர்ச்சுனா ஆகியோர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். நாமல் அதனை மறுத்தார். ஆளுங்கட்சியினர் வாய் திறக்கவில்லை. இது தவறாகும் -என்றார். (எ-44)

## தேங்காய் விலை சரிவு



கொழும்பு, ஜூலை 10

உள்ளூர்ச் சந்தையில் தேங்காய் விலை வேகமாகச் சரிந்துவருகின்றது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த சில மாதங்களாக ஒரு தேங்காய் 220 ரூபாவுக்கு விற்கப்பட்டது. தற்போது 100 ரூபா முதல் 170 ரூபாவரை பல்வேறு விலைகளில் தேங்காய்கள் விற்கப்படுகின்றன.

எதிர்வரும் மாதங்களில் தேங்காய் விலை மேலும் குறைவடையும் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். (ச-இ)

## 'வத்சலா' உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

ஆசியாவின் மிக வயதான யானையான 'வத்சலா', இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் உள்ள பன்னா புலிகள் காப்பகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தது. அந்த யானைக்கு 100 வயதுக்கு மேல் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆசியாவின் மிகவும் வயதான பெண் யானையான 'வத்சலா' பல ஆண்டுகளாக, இந்தியாவின் மத்திய பிரதேசத்திலுள்ள பன்னா புலிகள் காப்பகத்தில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அடையாளமாக இருந்தது. வயது முதிர்வு காரணமாக, சமீப காலமாக இந்த யானை பார்வையை இழந்து நீண்டதூரம் நடக்க முடியாதிருந்ததாகவும் புலிகள் காப்பகம் தெரிவித்தது. (ச-இ)

## இந்த ஆண்டில் இதுவரை வீதி விபத்துச் சாவுகள் 1,351

கொழும்பு, ஜூலை 10

இந்த ஆண்டில் கடந்த 30ஆம் திகதிவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 274 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இந்த வீதி விபத்துகளில் ஆயிரத்து 351 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ஆயிரத்து 166 வீதி விபத்துகள் பதிவாகியிருந்ததுடன், அவற்றில் ஆயிரத்து 222 பேர் உயிரிழந்திருந்தனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் அதிகளவான வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ-இ)



### இவ்வருடத்தில்

## தென்மராட்சியில் 24 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஆறு மாத காலத்தில் டெங்குக் காய்ச்சலால் 24 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனச் சாவகச்சேரி சுகாதாரப் பணியகத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒருவார காலப்பகுதியில் சங்கத்தானை, மண்டுவில், நுணாவில் மேற்கு ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளிலிருந்து மூன்று டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவே நுளம்பு பெருகும் இடங்களைத் துப்புரவுசெய்து சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்திருக்குமாறும் சுகாதாரப் பணியகத்தினர் மேலும் தெரிவித்தனர். (ச-25.9)



கிளிநொச்சி பிரமந்தனாறு சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரைத் தேர் வெள்ளோட்டம் நேற்று அதிகளவான பக்தர்கள் சூழ சிறப்புற நடைபெற்றது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதப்...

டுள்ளன. மீட்கப்பட்ட சான்றுப் பொருள்கள் முறையான அறிக்கையிடல்களுக்குப் பின்னர் நீதிமன்றத்தின் கட்டுக்காவலின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட புதிய பகுதியில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவை துப்புரவு செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பான அறிக்கையிடல்கள் இன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## முலவையில்...

(வயது-48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், மதுபானம் அருந்தியமையால் இறப்புச் சம்பவித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-20-27)

## ஈஸ்டர்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசன்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருகின்றார்.

ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பில் பிள்ளையான் மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தார். உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்ற போதும் அவர் சிறையிலிருந்தார். ஆனால் மேற்படி தாக்குதல் குறித்து அவர் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய விடயங்கள் தொடர்பில் தற்போது தகவல்களை வெளியிடமுடியாது. அவை விசாரணைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இதேவேளை, உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்சம்பவம் தொடர்பில் தகவல்கள் அறிந்த அசாத் மௌலானாவை நாட்டுக்கு கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. விசாரணைகள் அனைத்தும் தற்போது நல்ல நிலையில் சென்றுகொண்டிருக்கின்றன - என்றார். (அ-ம-44)

## சாராவின்...

உள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2019 ஏப்ரல் மாதம் சாய்ந்தமருது பகுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில், ஸஹ்ரான் குழுவின் பிரபல உறுப்பினரான புலஸ்தினி மகேந்திரன் எனப்படும் சாரா ஜஸ்மின் உயிரிழந்துவிட்டார் என தகவல் வெளியாகியது. அதுதொடர்பில் இரண்டு டி.என்.ஏ. (மரபணுப் பரிசோதனை) பரிசோதனைகள் இடம்பெற்றன. அவை இரண்டும் சாரா ஜஸ்மினின் நெருங்கிய உறவினர்களுடன் ஒத்துப்போகவில்லை.

மூன்றாவது தடவை சாரா ஜஸ்மினின் தாயுடன் அது ஒத்துப்போயுள்ளது. அப்போது சரத் வீரசேகரவே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்தார். இதுதொடர்பான மேலதிக தகவல்களை வெளியிட முடியாது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் அது தொடர்பான தகவல்கள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும். சாரா ஜஸ்மின் உயிரிழந்துவிட்டாரா இல்லையா என்பது தொடர்பிலும் சந்தேகம் உள்ளது. அதுதொடர்பிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரித்துவருகின்றனர் - என்றார். (அ-ம-44)

## துல்லிய...

டும், உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவ்வாறு எடுத்திருந்தால் தாக்குதலை தடுத்திருக்கலாம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்குள் தாக்குதல் நடத்த முற்பட்ட தற்கொலை குண்டுதாரி அப்துல் லதீப் ஜமில் மொஹமட், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதியே அதாவது தாக்குதல் சம்பவத்துக்கு முதல் நாளே ஹோட்டலுக்கு வந்துள்ளார். மாலை 4.52 மணிக்கு ஹோட்டலுக்குள் சென்றுள்ளார். ஹோட்டல் முகாமைத்துவத்தால் தாக்குதலுக்கு முன்னதாக இதுபற்றி அரச புலனாய்வுப் பிரிவுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நபர் 2017ஆம் ஆண்டிலிருந்து அடிப்படைவாதச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளார் என்பது தொடர்பில் அரச புலனாய்வு சேவை மற்றும் இதர புலனாய்வு சேவைகளால் விசாரணைகள் இடம்பெற்றுவந்தன. அதனால்தான் ஹோட்டல் நிர்வாகத்தில் ஏப்ரல் 20ஆம் திகதியே தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அந்தத் தகவல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவு நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு எடுத்திருந்தால் தாக்குதலைத் தடுத்திருக்கலாம். இது பாரதூரமான விடயமாகும். இது பற்றியும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விரிவான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன - என்றார். (அ-ம-44)

## சென்.பீற்றர்ஸ்...

முன்னெடுக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இந்த நிகழ்வுகளில் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின. இதன்போது, 135க்கும் மேற்பட்டோர் பலியாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## திஸ்ஸ...

நாளுக்கு முதல் நாளும் பூரணை தினத்தன்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன்படி இந்த மாதத்துக்கான போராட்டம் நேற்று மாலை 4.30 மணியளவில் ஆரம்பித்து மாலை 6.30 மணிவரை முன்னெடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இன்றும் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

நேற்றைய போராட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ந.காண்டீபன், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் தி.நிரோஷ், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன் தொடர்ச்சியாகப் பூரணை நாளான இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிமுதல் மாலை 6 மணிவரை போராட்டம் தொடரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## நயினை...

நாகபூஷணி அம்மன், விநாயகர், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்களும் ஆலய உள்வீதியில் திருநடனத்துடன் எழுந்தருளி காலை 8.30 மணியளவில் சித்திரத் தேரில் ஆரோகணித்தனர்.

சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டு, சிறப்புத் தீபாராதனை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து அடியவர்களின் 'அரோகரா' கோஷம் முழங்க காலை 9 மணியளவில் முத்தேர் பவனி ஆரம்பமானது. முத்தேர்கள் பவனி வந்தபோது நூற்றுக்கணக்கான ஆண் அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், காவடிகள் எடுத்தும், பெண் அடியவர்கள் பலரும் அடியழித்தும், கற்பூரச்சட்டிகள் எடுத்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (அ-ம-66-27)

## செம்மணிப்...

பெற்றுள்ளது. இதன்போது, பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் பிரிட்டன் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் லமி தெரிவித்ததாவது:-

செம்மணியில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன். நாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் இந்த விடயம் குறித்து நேரடிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம். இலங்கையின் பல பகுதிகளில் வசிக்கும் காணாமற்போனவர்களின் குடும்பத்தவர்களுடன் நாங்கள் நெருக்கமான தொடர்பைப் பேணிவருகின்றோம். அவர்களின் குரல்கள் செவிமெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக அரசசார்பற்ற அமைப்புகள் உட்பட ஏனைய தரப்புகளுடன் இணைந்து செயற்பட்டுவருகின்றோம்.

இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. ஆதலால், இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான நியாயாதிக்கம் சர்வதேச நீதிமன்றத்துக்கு இல்லாதமை பெரும் பிரச்சினையாகவுள்ளது - என்றார். (அ-ம-44)

## நேற்று...

இதன்படி செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 63ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி மீதான இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் பதினான்காம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன.

நேற்றைய அகழ்வின்போது ஏழு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி, இதுவரை 63 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 54 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் ஆணையாளர் மிராக் ரஹீம், காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரணித்தா, சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ராஜபக்சக்கள்...

முன்னெடுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே ஈஸ்டர் தாக்குதல்கள் இடம்பெற்றன - இவ்வாறு சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2015ஆம் ஆண்டு ராஜபக்சக்கள் தோல்வி அடைந்த பின்னர், அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக, பதற்றமான சூழலை உருவாக்குவதற்குரிய தேவைப்பாடு இருந்தது. இதற்கமைய மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணிலுக்கு இடையில் அரசியல் முறுகல் ஏற்படுத்தப்பட்டு அப்போதைய ஆட்சி பலவீனப்படுத்தப்பட்டது. அந்த நடவடிக்கை மட்டும் போதுமானதாக இருக்கவில்லை. ஏனெனில் 2015ஆம் ஆண்டில் மக்கள் வழங்கிய ஆணை வலிமை மிக்கது. அதனால் ராஜபக்சக்களுக்கு அரசியல் செய்ய போதுமான களம் இருக்கவில்லை. எனவே, தமக்கான சூழ்நிலையொன்றை ஏற்படுத்துவதற்கு ராஜபக்சக்கள் முற்பட்டனர். இனவாத சிங்கள மற்றும் இனவாத இஸ்லாம் குழுக்களை உருவாக்கினார்கள். முஸ்லிம் விரோதப் போக்கை உருவாக்கினார்கள். ஆட்சிக்கு வருவதற்குரிய சூழ்நிலையை 2016ஆம் ஆண்டில் இருந்தே உருவாக்கினார்கள். முஸ்லிம் இளைஞர்கள் இலங்கையில் வாழ்ந்து பயனில்லை என்ற நிலையைத் தோற்றுவித்தனர். இப்படிதான் தாக்குதலுக்குரிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது. மாறாக வெறுமனே தாக்குதல் நடக்கவில்லை.

புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பு வலுவாக இருந்தால் எப்படியான சூழ்நிலையை உருவாக்கினாலும் அதனைத் தடுத்துநிறுத்த முடியும். ஆனால் தாக்குதல் குறித்து புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும், அமைப்புகள் சுட்டிக்காட்டியும் அவை ஆட்சியாளர்களால் கவனத்தில் எடுக்கப்படவில்லை. சஜித், ரணில் போன்ற தலைவர்களே தேசியப் பாதுகாப்பை பூஜ்ஜிய நிலைக்குத் தள்ளியவர்கள்' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புமாணிப் பட்டம் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முகாமைத்துவக் கற்கைகள் சிறப்புமாணிப் பட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 3பாடங்களில் சித்திபெற்றிருத்தல், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் ஏதேனும் அடிப்படைக் கற்கைநெறியில் 60 திறமைமட்டத்தினை பூர்த்திசெய்திருத்தல், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் எஸ்.எல்.கியூ.எப் மட்டம் 2இல் 30 திறமை மட்டத்தினைக் கொண்ட ஒரு உயர்தரச் சான்றிதழ் கற்கை நெறியைப் பூர்த்திசெய்திருத்தல், மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி நடத்தப்படும் தேர்வுப் பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 31ஆம் திகதி வரை விண்ணப்பிக்கமுடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுன் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும் 0212223374 எனும் தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கமுடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-41)

## நிர்வாகசபைத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

வலி.மேற்குப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் சி. பிரணவசொரூபி தலைமையில் வலி. மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் வலி.மேற்குப் பிரதேச செயலக புதிய ஆயுள்வேத பாதுகாப்புசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக வெற்றிவேல் சக்திவேல், உபதலைவராக க.சன்ஷியா, செயலாளராக ஆ. சிவகுமார், பொருளாளராக வ.கிருஷானந்தன், உபசெயலாளராக ஐ. கண்ணா, கணக்காய்வாளராக சு.துவாரக, நிர்வாகசபை உறுப்பினராக வேலுப்பிள்ளை கணேசரத்தினம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-25)

# செம்மணிப் புதைகுழி அகழ்வுகள் உண்மைகளை வெளிக்கொணர்க

### ஜனாதிபதிக்கு ஈ.பி.டி.பி. கடிதம்


கொழும்பு, ஜூலை 10

செம்மணியில் முன்னெடுக்கப்படும் அகழ்வுகளில் மனித எச்சங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டுவரும் நிலையில் எக்காரணம் கொண்டும் புதைகுழி அகழ்வுகள் நிறுத்தப்படாமல் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் தெரிவிக்கையில்,

செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்படுகின்ற அகழ்வுப் பணிகளில் தொடர்ச்சியாக மனித எச்சங்கள் அகழப்பட்டுவருகின்றன. இவை தொடர்பாக முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் யார் என்பது வெளிக்கொண்டு வரப்படவேண்டும். இவ்விடயம் தொடர்பில் எமது மக்களிடையே நிலவுகின்ற குழப்ப நிலையை மேலும் தூண்டிவிடுவதாக சில சுயலாப அரசியல் சக்திகளின் கருத்துகளும், செயற்பாடுகளும் அமைந்து வருகின்றன.

எனவே, மேற்படி விடயம் தொடர்பில் ஆய்வுகள் மற்றும் விசாரணைகளைத் தொடர்ச்சியாக முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார். (ச-20,27)



# வல்வையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூலை 10

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் 80ஆவது அமுதவிழாவை முன்னிட்டு வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம், வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனை ஆகியன வல்வை 21 நண்பர்கள், வல்வை 1977 லண்டன் நண்பிகள் மற்றும் நலன்விரும்பியொருவர் ஆகியோரின் அனுசரணையில் நடத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வில் குருதிக்கொடை வழங்கும் அனைவருக்கும் கற்றல் உபகரணங்களுடன் அன்பளிப்பு கள் வழங்கப்படும். குருதிக்கொடையாளர்கள் 0779911131 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-66)

# தரவுகள் இற்றைப்படுத்தல் யாழ்.மாவட்டம் முன்னிலை

யாழ்ப்பாணம், ஜூலை 10

தேசிய ரீதியாகப் புள்ளிவிவரத் தரவுகளை இற்றைப்படுத்தியதில் யாழ். மாவட்டம் முன்னிலை வகித்துள்ளது என்று யாழ். மாவட்டச் செயலர் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

தொகைமதிப்பு ஆணையாளர், பிரதி மற்றும் உதவித் தொகை மதிப்பு ஆணையாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் தனியார் மண்டபமொன்றில் இடம்பெற்றபோது கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத தரவுகள் என வகைப்படுத்தி இந்த வருடத்தை விவசாயம் சார்ந்த தொகைமதிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளோம். இந்தத் தரவுகள் தேசிய ரீதியாக மொத்தத் தேசிய வருமானத்தில் மிக முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வதில் பங்களிப்புச்செய்வதால் வகைமற்றும் தொகை ரீதியான இந்த விவரங்கள் உரிய காலத்தில் அல்லது அதற்கு முன்னர் சரியான முறையில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-66)

வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.06.2025 அன்று சிவபதமடைந்த

உதயகுமார் சிலோசனா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (09.07.2025) புதன்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (11.07.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோவிலடி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

பவானந்தன் மகாலிங்கம்
(சகோதரன்)
076 572 3419

(CS/3591) J-1



மட்டுவில் சந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளருமான நி.அன்ரனி தேவதாஸ் தனது கிராம அலுவலர் பிரிவிலுள்ள கல்விகற்கும் துவிச்சக்கரவண்டியில்லாத இரு மாணவர்களுக்குத் துவிச்சக்கரவண்டி களை கடந்த சனிக்கிழமை வழங்கிவைத்தார். (ச-41-131)

## இலங்கைக்கு...

இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரியை 30 வீதமாக நிர்ணயித்துள்ளதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த வரி விதிப்பு, இலங்கையின் ஏற்றுமதித் துறையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இதுவரை இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 12.2 வீத வரிகளையே விதித்து வந்தது. இவ்வாறான நிலையிலேயே, தற்போது வரி விதிப்பு 30 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் இந்த வரி விதிப்பு நடைமுறைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.